**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.224/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.4 |
| Name : | பிரபாகரன் |
| Father's Name/Husband Name: | தங்கராசு |
| Village : | திருமாந்துரை |
| Taluk : | குன்னம் |
| Age : | 32/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 03.06.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரி 1 மற்றும் 2 ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தனியார் பள்ளியில பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 எனது அம்மா மற்றும் சகோதரி ஆவார்கள். எதிரிகள் என் வீட்டிற்கு எதிரே தான் குடியிருந்து வருகிறார்கள். 01.03.2021ம் தேதி கொரோனா காலம் என்பதால் நான் என் அப்பாவுடன் கட்டிட வேலைக்கு சென்றிருந்தேன். கொரோனா காலத்தில் பள்ளிகள் இயங்காததால் ஆசிரியர் பணியை விட்டுவிட்டு அப்பாவிற்கு உதவியாக வேலைக்கு சென்றிருந்தேன்.

அன்று மாலை 05.00 மணியளவில் நான் வேலை செய்து கொண்டிருந்தபோது எனக்கு காசிநாதன் என்பவர் போன் செய்து எதிரி சக்திவேல் எனது அம்மாவை அடித்து வலது கையில் கடித்து விட்டதாகவும், எனது தங்கையை எதிரி ரேவதி அடித்ததாக தகவல் சொன்னார். நான் தகவல் தெரிந்து வீட்டிற்கு வந்து காயமடைந்த

அ.சா.1 மற்றும் அ.சா.1ஐ பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். அதன்பிறகு மருத்துவமனைக்கு வந்த போலிசார் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். அடுத்த நான் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள்.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.